ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1943/19 - 2015 දෙසැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2015.12.04
*1943/19 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இலக்கம் : 01/10/03/04.

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் எம். பீ. ஜயசிங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. மாகாண விவசாய பணிப்பாளர் (ஊவா) திரு. ஆர். எம். நந்தசிரி அவர்கள், 2015.08.22 ஆந் திகதி முதல் 2015.08.29ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.08.22 ஆந் திகதி முதல், அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை இலங்கை கமத்தொழில் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஏ. பீ. எம். விஜயதுங்க அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, மாகாண விவசாய பணிப்பாளர் (ஊவா) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

2. இலங்கை கமத்தொழில் சேவையின் தரம் III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. ஏ. ஆரியசேன குருசிங்க அவர்கள், 2015.08.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் பிந்துனுவெவ தொழில் பயிற்சி நிறுவனத்தின் பிரதி கமத்தொழில் பணிப்பாளராக (பயிற்சி) முழுநேர பதிற்கடமையாற்ற.

3. இலங்கை கமத்தொழில் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஏ. பீ. எம். விஜயதுங்க அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2015.10.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண விவசாய பணிப்பாளராக பதிற்கடமையாற்ற.

4. மொணராகலை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக சேவையாற்றும் வைத்தியர் திரு. பீ. டி. கே. அதிகாரி அவர்கள், 2015.11.07 ஆந் திகதி முதல் 2015.11.22 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.11.07 ஆந் திகதி முதல், அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, வைத்தியர் திரு. எச். ஜீ. ஜீ. எல். பீ. ஆரியதாச அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, மொணராகலை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

5. ஊவா மாகாண கல்விப் பணிப்பாளராக சேவையாற்றும் திரு. ஆர். எம். பீ. ரத்நாயக அவர்கள், 2015.11.06 ஆந் திகதி முதல் 2015.11.18 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.11.06 ஆந் திகதி முதல், அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஆர். எம். ஆனந்த அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

6. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜே. ஏ. எஸ். பீ. ஜயசிங்க அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2015.11.18 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணையகத்தின் செயலாளராக பதிற்கடமையாற்ற.

7. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜே. ஏ. எஸ். பீ. ஜயசிங்க அவர்கள், 2015.11.18 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில், ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கங்கள் பதிவாளர் பதவியின் பணிகளை முழுநேரமாற்றுவதற்கு,

8. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எம். எஸ். டி. ரத்நாயக அவர்கள், 2015.10.15 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (நிர்வாகம்).

9. இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எஸ். என். பீ. எம். பத்மசிறி அவர்கள், 2015.11.23 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில், ஊவா மாகாண சபையின் மாகாண பொறிமுறை பணிப்பாளராக.

எம். பீ. ஜயசிங்க,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2015, திசெம்பர் 01.

12 - 661

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.